பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

16 04 2024 **TUESDAY** 6 45 **AM**

வணக்கம். மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் நாளை மாலையுடன் நிறைவடையவுள்ள நிலையில், வாக்குப்பதிவிற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது

2. வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற தொலைநோக்குப் பார்வையுடன் பிஜேபி செயல்பட்டு வருவதாக அக்கட்சியின் மூத்த தலைவரும் பிரதமருமான திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசு முறையாக நிதி வழங்கவில்லை என திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

4. திமுக அரசின் செயல்பாடுகளால் தமிழக மக்கள் அதிருப்தியில் உள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி 25 ரன் வித்தியாசத்தில் பெங்களூரு அணியை வென்றது

>>>>><<<<<

மக்களவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் தமிழகத்தில் நாளை மாலையுடன் நிறைவடையவுள்ள நிலையில், வாக்குப்பதிவிற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தில் 39 தொகுதிகளிலும் நாளை மாலை 6 மணியுடன் பிரச்சாரம் நிறைவடைகிறது.

இந்நிலையில், ஒரு லட்சத்து 59 ஆயிரத்து 100 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும், 82 ஆயிரத்து 14 கட்டுப்பாட்டுக் கருவிகளும் தயார் நிலையில் உள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாஹூ தெரிவித்துள்ளார்.

நாளை மாலை 6 மணிக்கு மேல் பிரச்சாரம் உட்பட எந்தவகையான வாக்கு சேகரிப்பு நடவடிக்கையிலும் ஈடுபட அனுமதி இல்லை என்று அவர் குறிப்பிட்டார்.

வாக்காளர்கள் புகார் தெரிவிக்க விரும்பினால், 1 9 5 0 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம் என்றும் அவர் கூறினார்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பிரெய்லி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சி-விஜில் கைபேசி செயலி மூலம் 4 ஆயிரத்து 169 புகார்கள் வந்ததாகவும், அவற்றில் 3 ஆயிரத்து 350 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் திரு. சத்யபிரத சாஹூ கூறினார்.

>>>>><<<<<

100 சதவீதம் வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி தேர்தல் ஆணையம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

குறிப்பாக, முதல்முறை வாக்காளர்களிடையே ஏற்படுத்தப்பட்டு வரும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பெரும் வரவேற்பை பெற்றுள்ளன.

நீலகிரி மாவட்டத்தில் முதல்முறையாக வாக்களிக்கவுள்ள கல்லூரி மாணவ மாணவிகள், அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டனர்.

(சவுண்ட் பைட் - மாணவிகள் 40 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற தொலைநோக்குப் பார்வையுடன் பிஜேபி செயல்பட்டு வருவதாக அக்கட்சியின் மூத்த தலைவரும் பிரதமருமான திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டியில், நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காகவே தாம் முடிவுகளை எடுப்பதாக தெரிவித்தார்.

வளர்ச்சி அடைந்த இந்தியாவுக்கான லட்சிய பணிகள் கடந்த சில ஆண்டுகளாகவே நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

ஒரே நாடு, ஒரே தேர்தல் நடைமுறையை அமல்படுத்துவது தமது அரசின் கொள்கை என்றும் அவர் கூறினார்.

இது அமல்படுத்தப்பட்டால் நாட்டுக்கு பெரிய அளவில் நன்மை கிடைக்கும் என்று அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களை பிஜேபி தலைமையிலான மத்திய அரசு அச்சுறுத்துவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை அவர் மறுத்தார்.

அமலாக்க இயக்குநரகம் பதிவு செய்துள்ள வழக்குகளுக்கும் அரசியலுக்கும் தொடர்பில்லை என்று அவர் தெரிவித்தார்.

நேர்மையானவர்கள் பயப்படத் தேவையில்லை என்றும் அவர் கூறினார்.

தமிழகத்தைப் பொறுத்தவரை திமுக அரசு மீது மக்கள் அதிருப்தியில் இருப்பதாக திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசு முறையாக நிதி வழங்கவில்லை என திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட அவர், சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட பணிகள் தாமதமடைவதற்க்கு மத்திய அரசு முறையாக நிதி வழங்காததே காரணம் என்று தெரிவித்தார்.

நாடுமுழுவதும் 2 கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்ற வாக்குறுதியை மத்திய அரசு நிறைவேற்றவில்லை என்றும் அவர் குறை கூறினார்.

மத்திய அரசின் நடவடிக்கைகள் ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்களை பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது திரு. மு.க.ஸ்டாலின் கூறினார்.

>>>>><<<<<

திமுக அரசின் செயல்பாடுகளால் தமிழக மக்கள் அதிருப்தியில் உள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

மத்திய சென்னை மற்றும் தென்சென்னை பகுதிகளில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட அவர், கடந்த 6 மாதத்தில் மட்டும் அரிசி, எண்ணெய், பருப்பு உள்ளிட்ட மளிகைப் பொருட்களின் விலை 40 சதவீதம் உயர்ந்துள்ளதாக கூறினார்.

கட்டுமானப் பொருட்களின் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

சென்னை மாநகரைப் பொறுத்தவரை மழைநீர் வடிகால் பணிகளுக்காக திமுக அரசு 4 ஆயிரம் கோடி ரூபாயை செலவு செய்ததாக கூறினாலும், ஒருநாள் மழைக்கே சென்னை வெள்ளத்தில் தத்தளித்ததாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி கூறினார்.

>>>>><<<<<

சென்னையில் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநகராட்சி ஆணையரும், மாவட்ட தேர்தல் அலுவலருமான திரு. ஜெ. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கோடம்பாக்கம் பகுதியில் வாகனப் பேரணியை தொடங்கி வைத்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 33 வகையான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தற்போது 45-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றார்.

(சவுண்ட்பைட் - ராதாகிருஷ்ணன் 60 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

ஈரோடு மாவட்டத்தில் தேர்தலுக்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாவட்ட ஆட்சியரும், தேர்தல் அலுவலருமான திரு. ராஜகோபால் சுங்கரா கூறியுள்ளார்.

பதற்றமான வாக்குச்சாவடிகளில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - ராஜகோபால் 57 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

தென் தமிழகத்தின் ஓரிரு இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையத்தின் இயக்குநர் திரு. செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், ஒருசில இடங்களில் வெப்பநிலை அதிகரிக்கக்கூடும் என்றார்.

>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

ஈரானை திருப்பி தாக்க வேண்டாம் என இஸ்ரேலிடம் மேற்கத்திய நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

>>>>><<<<<

அமெரிக்காவில் கடந்த முறை அதிபர் தேர்தலுக்கு முன்பு முறைகேடாக செயல்பட்டதாக கூறப்படும் விவகாரத்தில் முன்னாள் அதிபர் திரு. டொனால்டு ட்ரம்பிற்கு எதிராக நியூயார்க் நீதிமன்றம் குற்றவியல் விசாரணையை தொடங்கியுள்ளது.

>>>>><<<<<

தருமபுரியில் மக்களவைத் தேர்தலில் வாக்குச்சாவடி நுண்பார்வையாளர்கள் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து மாவட்ட ஆட்சியர் திருமதி. சாந்தி ஆலோசனை வழங்கினார்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்தி

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி 25 ரன் வித்தியாசத்தில் பெங்களூரு அணியை வென்றது.

பெங்களூருவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் பேட் செய்த ஹைதராபாத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 287 ரன்கள் எடுத்தது.

288 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பெங்களூரு அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 262 ரன் மட்டுமே எடுத்து தோல்வி அடைந்தது.

கொல்கத்தாவில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் கொல்கத்தா அணி - ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<